

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: |
|---|
| |

பதிவு எண்: | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



**Saidai Duraisamy's**
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
**Website: www.mntfreeias.com**

| Question Booklet No: |
|---|
| |

**Register Number:** | | | | | | | | | | |

# TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
## 11 ஆம் வகுப்பு – பாடம் – 5, 6, 7, 8

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் காண்க.
“ பெருங்கடல் முகுந்த இருங்கிளைக் கொண்மூ”
(A) வானம்
(B) மேகம்
(C) தண்ணீர்
(D) பாம்பு

2. அகநானூற்றுத் திணையில் பாடல்களின் எண்ணிக்கையுடன் பொருத்துக.
a. மருதம் - 1. 40
b. பாலை - 2. 40
c. குறிஞ்சி - 3. 80
d. நெய்தல் - 4. 200
(A) 4 2 1 3
(B) 2 4 3 1
(C) 3 1 2 4
(D) 3 1 4 2

3. பிரபஞ்சன் தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து அதில் சரியானதை தேர்ந்தெடு.
1. இயற்பெயர் : வைத்தியலிங்கம்
2. இவர் புதுச்சேரியை சார்ந்தவர்.
3. 1995 இல் இவரது புதினமான ‘ வானம் வசப்படும்’ தமிழக அரசின் விருது பெற்றது.
4. இவருடைய படைப்புகள் தெலுங்கு, கன்னடம், இந்தி, பிரெஞ்சு, ஆங்கிலம் உள்ளிட்ட பழமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 1, 2, 4
(D) 1, 3, 4

4. பா இயற்றல் : நிரையசைத் தொடர்பான பின்வரும் விதிகளில் எது தவறு?
   (A) இரு குறில் இணைந்து வருதல்
   (B) குறில் நெடில் இணைந்து வருதல்
   (C) நெடில் ஒற்றுடன் வருதல்
   (D) இருகுறில் இணைந்து ஒற்றுடன் வருதல்.

5. டி.கே.சி தொடர்பான பின்வரும் கூற்றுக்களை ஆராய்ந்து தவறானததை தேர்வு செய்.
   (A) டி.கே.சிதம்பரனார் சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்.
   (B) இவர் இலக்கியத்தைப் பற்றி பேசிய கூட்டமானது 'வட்டத் தொட்டி' என பெயர் பெற்றது.
   (C) இவருடைய நூல்கள் : இதய ஒலி, கம்பர் யார்? என்பதாகும்.
   (D) இவர் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் போன்றவற்றிற்கு உரை எழுதியுள்ளார்.

6. கலைச்சொல் அறிக: தவறான இணைகள் எத்தனை?
   1. படையெடுப்பு - Invasion
   2. மாலுமி - Merchant
   3. ஆவணம் - File
   4. உப்பங்கழி - Grey water
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) 4

7. இலக்கணக்குறிப்பு அறிக : பிழையற்ற இணை எது?
   (A) அருஞ்சமம் - வினைத்தொகை
   (B) அசைஇ - செய்யுளிசை அளபெடை
   (C) திறன் - ஈற்றுப்போலி
   (D) ஐந்தும் - எண்ணும்மை

8. சீறாப்புராணம்,
   1. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குகிறது.
   2. 'சீறா' என்பது சீறத் எனும் உருது சொல்லின் திரிபாகும்.
   3. இதன் ஆசிரியர் உமறுப்புலவர் ஆவார்.
   4. இது நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை கூறுகிறது.
   மேற்கண்ட வாக்கியங்களில் எது/எவை சரியானது?
   (A) 1,2,4
   (B) 1,3,4
   (C) 2,3,4
   (D) அனைத்தும்

9. தவறான தொடரை கண்டறிக.
   (A) ஆங்கிலத்தில் டைரி என்பது டைரியம் என்னும் கிரேக்கச் சொல்லின் மூலமான 'டைஸ்' என்ற சொல்லிலிருந்து உருவானது.
   (B) நாட்குறிப்புகளின் முன்னோடியாக திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப்படும் கிரேக்க குறிப்பேடு ஆகும்.
   (C) EPHEMERIDES என்னும் சொல் ஒரு நாளுக்கான முடிவு என்னும் பொருளைத் தரும்.
   (D) ஆனந்தரங்கர் புதுச்சேரி வரலாற்றினை பதிவு செய்தவர்கள் முதன்மையானவர்.

10. பொருத்துக: ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கிலிருந்த நாணயங்கள்.
    a. 60 காசு - 1. ஒரு ரூபாய்
    b. 8 பணம் - 2. ஒரு வராகன்
    c. 480 காசு - 3. ஒரு பணம்
    d. 24 பணம் - 4. ஒரு ரூபாய்
    (A) 3142
    (B) 2314
    (C) 4213
    (D) 1324

11. படைக்கு பாதுகாப்பு நான்கு என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். அவை,
    (A) மனவலிமை, வீரம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்குரியவர் ஆதல்
    (B) வீரம், மானம், அரசர் வழி நடத்தல், நம்பிக்கைக்குரியவர் ஆதல்
    (C) வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல்
    (D) வீரம், மானம், விவேகம், முன்னோர் வழியில் நடத்தல்.

12. இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கை கொல்லும் காழ்த்த இடத்து - குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?
    (A) வஞ்சப்புகழ்ச்சி அணி
    (B) எடுத்துக்காட்டு உவமையணி
    (C) தன்மை நவிற்சி அணி
    (D) பிறிது மொழிதல் அணி

13. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. தஞ்சை பெரிய கோவிலில் இரண்டு கோபுரங்கள் இருக்கின்றன.
   2. அந்த கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம் ஆகும்.
   (A) 1 சரி 2 தவறு
   (B) 2 சரி 1 தவறு
   (C) 1,2 சரி
   (D) 1,2 தவறு

14. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
   1. பிரம்மா, ஈஸ்வரன், விஷ்ணுகளுக்கு முதலாம் நரசிம்மவர்மன் குடைவரை கோவில்களை அமைத்ததாக மண்டகப்பட்டு கல்வெட்டு கூறுகின்றது.
   2. அதற்குப் பின் இரண்டாம் நரசிம்மவர்மன் கைலாசநாதர் கோவிலை காஞ்சிபுரத்தில் அமைத்தார்.
   3. காஞ்சி கைலாசநாதர் கோவிலே ராஜராஜனுக்கு அது போன்ற ஒரு பெரிய கோவிலை கட்ட வேண்டும் என்று ஆர்வத்தை தூண்டியது.
   மேற்கண்ட வாக்கியங்களில் எது/ எவை சரி?
   (A) 1, 2
   (B) 2, 3
   (C) 1, 3
   (D) 1, 2, 3

15. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. கவிதை என்ற கலை வடிவத்தின் அழகியல் ஊடாக மானுடத்தின் விழுமியங்களை உரத்த குரலில் பேசியவர்.
   2. அவருடைய இயற்பெயர் மதுசூதனன்.
   யார் இவர்?
   (A) ஆத்மாநாம்
   (B) பிரபஞ்சன்
   (C) பிரமிள்
   (D) சுந்தர ராமசாமி

16. குற்றால குறவஞ்சி,
   1. ஒரு வகை நாடக இலக்கிய வடிவம் ஆகும்.
   2. இது குறத்திப்பாட்டு என்றும் அழைக்கப்படுகிறது.
   3. முத்தமிழ் காவியமாகவும் திகழ்கிறது.
   மேற்கண்டவற்றில் எத்தனை சரி?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

17. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் சிலேடை வகையே திருச்சாழல் ஆகும்.
   2. ‘சாழல்’ என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு ஆகும்.
   3. ஒரு பெண் இறைவனை பழிப்பது போலவும் மற்றொரு பெண் இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படுவதாகும்.
   4. மாணிக்கவாசகர் இறைவனின் பெருமையை தெரிவிக்கும் 20 பாடல்களை பாடியுள்ளார்.

   மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?

   (A) 1, 2, 3
   (B) 2, 3, 4
   (C) 2, 3
   (D) 1, 3

18. சொற்பொருள் காண்க.
   a. குழல் - சங்கு
   b. நாங்கூழ் - மண்புழு
   c. வரிசை - சிலம்பு
   d. கொத்து - மேகம்

   மேற்கண்ட இணைகளில் எத்தனை தவறானது?

   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

19. இசைஞானி இளையராஜா தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து அதில் தவறானதை தேர்ந்தெடு.
   1. சிம்பொனித் தமிழர் என்று அழைக்கப்படுகிறார்.
   2. அன்னக்கிளி படத்தில் அவரது இசை முதன் முதலில் அறிமுகமானது.
   3. அவருடைய இசை ஐவகை நிலப் பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுக்களை கொண்டது.
   4. பஞ்சமுகி என்ற இசைத்தொகுப்பு அவர் உருவாக்கியதாகும்.

   மேற்கண்டவற்றில் எது தவறு?

   (A) 2 மட்டும்
   (B) 3 மட்டும்
   (C) 4 மட்டும்
   (D) எதுவுமில்லை

20. பின்வரும் தொடர்களை கவனித்து சரியற்ற தொடரை தேர்ந்தெடு.
   (A) தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் உள்ளன.
   (B) சாளரபாணி என்ற பண் எட்டாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.
   (C) பிங்கல நிகண்டு என்னும் நூலில் 103 பண்கள் காணப்படுகின்றன.
   (D) பண்கள், பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண், பொதுப்பண் என்று பிரிக்கப்படுகின்றன.

21. சங்கரதாசு சுவாமிகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை ஆராய்க.
   1. காலம் : 1876 - 1922
   2. நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கியவர்.
   3. இளமையில் இவர் பழனி தண்டபாணி சுவாமிகளை தேடிச்சென்று நடிப்புத் திறமையை கற்றுக் கொண்டார்.
   4. தனது 16 ஆவது வயதில் வெண்பா, கலித்துறை, இசைப்பாடல்கள் ஆகியவற்றை இயற்றத் தொடங்கி விட்டார்.

   மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?
   (A) 1, 2, 3
   (B) 2, 4
   (C) 2, 3
   (D) 1, 3, 4

22. ப. ஜீவானந்தம்,
   1. ஒரு காந்தியவாதி
   2. சுய மரியாதை இயக்கப் போராளி
   3. பொதுவுடைமை இயக்கத் தலைவர்
   4. 1965இல் இயற்கை எய்தினார்.

   மேற்கண்ட வாக்கியங்களில் எத்தனை சரியற்றது?
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) எதுவுமில்லை

23. புரட்சிக்கவி எனும் நூல் தொடர்பான கூற்றுகளை ஆராய்ந்து அதில் சரியானதை தேர்ந்தெடு.

கூற்று 1 : இந்தி மொழியில் எழுதப்பட்ட ‘ பில்கணீயம்’ என்னும் காவியத்தைத் தழுவி எழுதப்பட்டது.

கூற்று 2: இது 1939இல் பாரதிதாசனால் இயற்றப்பட்டது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

24. பொருத்துக : பிற மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவை.

a. அந்நியன் - 1. காப்கா
b. குட்டி இளவரசன் - 2. ஆல்பர் காம்யு
c. உருமாற்றம் - 3. எக்சுபெரி

(A) 2 3 1
(B) 1 3 2
(C) 2 1 3
(D) 1 2 3

25. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தொடர்பான கூற்றுகளை ஆராய்ந்து தவறான ஒன்றை தேர்வு செய்.

(A) உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாக பிறந்தவன்.
(B) வடக்கே இமயமலை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று இமயத்தில் புலிக்கொடியை நட்டவன்.
(C) கடம்பர்களை வென்று தன் வீரர்களுக்கு கவசமாக விளங்கியவன்.
(D) அவனது நாடு காத்தச் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் குமட்டூர் கண்ணனார் இரண்டாம் பதிற்றுப்பத்தில் புகழ்கிறார்.

26. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. வண்ணந் தாமே நாலைந் தென்ப - தொல்காப்பியம்
2. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே - நன்னூல்

மேற்கூறியவற்றில் எது/ எவை சரி?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1,2
(D) எதுவுமில்லை

27. பதிற்றுப்பத்து தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரி?
   1. எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களில் ஒன்று.
   2. இது சேர மன்னர்கள் 10 பேரின் சிறப்புகளை எடுத்தியம்புகிறது.
   3. இது பாடாண் திணையில் அமைந்துள்ளது.
   4. முதல் பத்தும் இறுதி பத்தும் கிடைக்கவில்லை.

(A) 1,3,4
(B) 2,3
(C) 1,2,4
(D) அனைத்தும்.

28. பின்வருவனவற்றுள் எத்தனை இணைகள் பொருத்தமாக உள்ளது?
   1. பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்- பாரதியார்.
   2. பெண்ணடிமை தீரு மட்டில் பேசும் திருநாட்டில் மண்ணடிமை....- பாரதிதாசன்
   3. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் - அறிஞர் அண்ணா
   4. நாட்டுக்குக் கோட்டை மதில்!

நடமாடும் கொடிமரம் நீ - தாராபாரதி

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

29. மயிலை சீனி. வெங்கடசாமி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறு?

(A) தமிழ் மொழியில் மறந்தும் மறைந்ததுமான சிறந்த செய்திகளை வெளிக்கொணர்ந்து வீரிய உணர்வுடன் வெளியிட்டவர்.
(B) அவரது ‘ களப்பிரர் கால தமிழகம்’ என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் கருதப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டியது.
(C) மதுரைப் பல்கலைக்கழகம், 1970 ஆம் ஆண்டு ‘தமிழ் பேரவைச் செம்மல்’ எனும் பட்டமளித்தது.
(D) அவரது படைப்புகள் சில: உறையூர் அழிந்த வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, நரசிம்மவர்மன் போன்றவை

30. கலைச்சொல் அறிக: பொருந்தாதது எது?

(A) உத்திகள் - Strategies
(B) மாயை - Magic
(C) புனைபெயர் - Pseudonym
(D) தொழிற்சங்கம் - Trade Union

31. சித்தர்கள் தொடர்பான பின்வரும் கூற்றை ஆராய்க.
   1. சிலப்பதிகாரத்தில் நாடுகாண்காதையில் இடம்பெறும் ‘சித்தன்’ என்ற சொல்லுக்கு உரியவர்கள்.
   2. தொல்காப்பியத்திலும் திருவாசகத்திலும் காணப்படும் ‘நிறைமொழி மாந்தர் ‘ என்ற சொல்லுக்கு உரியவர்கள்.
   3. ‘பிறப்பறுத்தவர்கள்’ என்று அழைக்கப்படுபவர்கள்.

   மேற்கூறியவற்றில் எது/எவை தவறு?
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) எதுவுமில்லை

32. கீழ்க்கண்டவற்றில் பிழையற்றது எது?
   (A) ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே சாதி வகை.... - சிவவாக்கியர்.
   (B) யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில் - பாரதியார்.
   (C) அமிர்தமுண்டு நான் அழிந்து நின்ற நாள் - பத்திரகிரியார்.
   (D) நந்தவ னத்திலோர் ஆண்டி...... - பாம்பாட்டிச் சித்தர்

33. பிரமிள் தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து எது சரியென தேர்வு செய்.
   1. இயற்பெயர் : சிவரமாலிங்கம்
   2. இலங்கையில் பிறந்தவர்.
   3. புனைப்பெயர்கள் : அரூப் சிவராம், தருமு சிவராம்
   4. இவரது லங்காபுரி ராஜா உள்ளிட்ட சிறுகதை தொகுப்புகளும் நட்சத்திரவாசி என்னும் நாடகமும் வெளிவந்துள்ளன.

   (A) 1, 2, 3
   (B) 2, 3, 4
   (C) 1, 3, 4
   (D) 1, 2, 3, 4

34. பின்வரும் தகவல்களில் எது தவறானது.
   (A) மௌலானா ரூமி ஆப்கானிஸ்தானில் 1207-ல் பிறந்தவர்.
   (B) இவர் சூஃபி பிரிவை தழுவியவர்.
   (C) இவர் மஸ்னவி என்ற உலகப் புகழ் பெற்ற பாரசீக ஞான காவியத்தை படைத்தவர்.
   (D) மேற்கண்ட அனைத்தும்.

35. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும் பொய்மையிலிருந்து உண்மைக்கும் மரணத்திலிருந்து இறவாமைக்கும் நாம் செல்ல வழிகாட்டும் நூல்களில் மகாபாரதம் ஒன்று.

கூற்று2 : அதில் வரும் நாயகர்களில் கர்ணன் இறவாப் புகழுடையவன்.

மேற்கண்டவற்றில் எது/எவை தவறு?

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 1, 2

(D) எதுவுமில்லை

36. பின்வருவனவற்றுள் எத்தனை இலக்கணக்குறிப்புகள் சரி?

1. வாழ்அயன் - இடைக்குறை
2. வென்றி - மெலித்தல் விகாரம்
3. மாமதலை - பண்புத்தொகை
4. வெவ்வினை - உரிச்சொல்

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

37. பின்வருவனவற்றுள் எது/எவை தவறு?

(A) இந்தியாவில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ராமாயணம், மகாபாரதம் ஆகும்.

(B) பாரசீக மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட் , ஒடிசி.

(C) தமிழில் எழுதப்பட்ட இதிகாசங்கள் கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகும்.

(D) தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகும்.

38. பொருந்தாத இணை : சொல்லும் பொருளும்

(A) தரங்கம் - கடல்

(B) கவனம் - வேகம்

(C) துரதகம் - வலிமை

(D) வென்றி- வெற்றி

39. வில்லிபுத்தூரார் தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியானதை தேர்வு செய்.
   1. தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர்.
   2. வடமொழியில் வியாசர் எழுதிய மகாபாரதத்தை தழுவி தமிழில் இயற்றியவர்.
   3. இவர் வரபதி ஆட்கொண்டான் எனும் மன்னனால் ஆதரிக்கப்பட்டார்.

(A) 1, 2, 3
(B) 1, 2
(C) 2, 3
(D) 1, 3

40. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : தமிழ் சிறுகதைகளை உலக தரத்திற்கு உயர்த்தியவர் புதுமைப்பித்தன்.
கூற்று 2: ஆங்கில இலக்கியத்தின் கடைசி கொழுந்து என்று கருதப்படுகிறவர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்

(A) 1 சரி 2 தவறு
(B) 2 சரி 1 தவறு
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் தவறு

41. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு

நாயன்மார்கள் ----- பேர்?

(A) என்ன
(B) எத்தனை
(C) எப்படி
(D) எவ்வாறு

42. வள்ளலார் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரி?
   1. காலம் : 1823 - 1864
   2. திருவருட்பாவை இயற்றியவர்.
   3. கடவுள் ஒருவரே என்ற கொள்கை உடையவர்.
   4. சாதி, மத, இன, பால் வேறுபாடுகள் கடந்த அருட்பெருஞ்ஜோதியே இறைவன் என்று வலியுறுத்தியவர்.

(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 1, 3, 4
(D) 1, 2, 3, 4

43. பொருத்துக:

a. என் வாழ்க்கை என் கையில் - 1. இ.மறைமலை
b. சொல்லாக்கம் - 2. ஞானி
c. மறைக்கப்பட்ட இந்தியா - 3. எஸ்.ரா

(A) 2 3 1
(B) 1 3 2
(C) 2 1 3
(D) 1 2 3

44. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்.
2. கிழக்கையும் மேற்கையும் இணைத்து தீர்க்கதரிசி.

என்றெல்லாம் அழைக்கப்படுபவர் யார்?

(A) காந்தி
(B) தாகூர்
(C) படேல்
(D) நேரு

45. த.நா.குமாரசுவாமி தொடர்பான பின்வரும் கூற்றுக்களை ஆய்ந்து சரி அல்லாததை தெரிவு செய்.

1. சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் எனும் நூலை தமிழில் மொழியாக்கம் செய்தவர்.
2. தமிழ், சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, உருது, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்றுத் தேர்ந்தவர்.
3. தமிழ் - வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டை பாராட்டி வங்க அரசு, 'நேதாஜி இலக்கிய விருது' அளித்து சிறப்பித்துள்ளது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

46. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : காக்கை குருவி எங்கள் ஜாதி என்று கூறியவர் மகாகவி.

கூற்று 2: கூவும் கோயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும் என்று கூறியவர் சாகுல் அமீது.

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2 தவறு
(D) 1, 2

47. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. இது ஒரு நாடக நூல்.
2. காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக திகழ்கிறது.
3. இயற்கையில் ஈடுபாடு கொண்டு அதனை தோய்ந்து இணையில்லாத இன்பமும் அமைதியும் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதை கூறுவதாக இந்த நூல் அமைந்துள்ளது.

மேற்கண்ட தகவல்களுக்கு பொருத்தமான நூல் எது?

(A) அகத்தியம்
(B) குற்றாலக் குறவஞ்சி
(C) மனோன்மணீயம்
(D) நீலகேசி

48. இலக்கணக்குறிப்பு அறிக.

1. சிறுபுல் - வினைத்தொகை
2. வீழருவி - வினைத்தொகை
3. காலத்தச்சன் - உவமைத்தொடர்
4. உருட்டி - உரிச்சொல்

(A) 1,3,4 சரி
(B) 1,3,4 தவறு
(C) 2,3 சரி
(D) 2,3 தவறு

49. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1: சிலப்பதிகாரத்தில் 12 வகையான ஆடல் கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

கூற்று 2: தொல்காப்பியத்திலும் திருநங்கையர் இருந்ததற்கான சான்றுகள் இருக்கின்றது.

(A) கூற்று 1 சரி 2 தவறு
(B) கூற்று 1 தவறு 2 சரி
(C) இரண்டு கூற்றும் சரி
(D) இரண்டு கூற்றும் தவறு

50. நர்த்தகி நடராஜ் தொடர்பான பின்வரும் வாக்கியங்களில் எது/ எவை சரி?
   1. மதுரையில் பிறந்தவர்.
   2. இளமையில் நடிகை வைஜயந்தி மாலாவின் நடனத்தால் ஈர்க்கப்பட்டவர்.
   3. அவருக்கு பரதம் கற்றுக் கொடுத்த தஞ்சை கிட்டப்பா, அவருக்கு நர்த்தகி என்று பெயர் சூட்டினார்.
   4. உண்மையில் ஒரு நடிகையாக ஆவதையே முழு முதல் இலட்சியமாக ஆரம்பத்தில் கொண்டிருந்தார்.

(A) 1, 2, 3
(B) 2, 3, 4
(C) 1, 3, 4
(D) 1, 2, 3, 4

51. சுந்தரனார் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறு?
(A) இவர் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855 இல் பிறந்தவர்.
(B) திருவனந்தபுரம் அரசு கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணியாற்றியவர்.
(C) சென்னை பல்கலைக்கழகம் இவருக்கு ராவ்பகதூர் எனும் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது.
(D) தமிழக அரசு, இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி உள்ளது.

52. திரு.வி.க அவர்களின் கல்வி குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரி?
   1. தொடக்க கல்வி தந்தையிடம் பயின்றார்.
   2. தமிழ் கல்வி, நா.கதிரைவேல் என்பவரிடம் கற்றார்.
   3. மயிலை தணிகாசலம் என்பவரிடம் சைவ நூல்களை பயின்றார்.

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2, 3
(D) அனைத்தும்

53. தவறான தொடர் எது?
(A) மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை பொருண்மொழிக்காஞ்சித்துறை.
(B) ஜி.யு.போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பக்தி இலக்கியம் திருக்குறள்.
(C) கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் மன்றம்.
(D) நற்றிணை 153வது பாடலை இயற்றியவர் தனிமகனார்.

54. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சீரை பூர்த்தி செய்க.

"ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் ______

நன்றுஆகா தாகி விடும்"

(A) உள்ளாறும்

(B) ஆற்றுவான்

(C) உண்டாயின்

(D) உலகவாம்

55. வாக்கியங்களை ஆராய்க.

1. சித்தர்கள் என்றால் நிறைவடைந்தவர் என்பது பொருள்.
2. தமிழில் 'சித்து' என்னும் சொல் மனம், கருத்து, ஆன்மா என்ற பொருள்களைக் கொண்டது.
3. தமிழ்ப் பேரகராதியின்படி 'சித்தம்' என்ற சொல் மெய்யறிதல், வெற்றி, காரியம் கைகூடல் என்று பொருள்படும்.
4. அவர்கள் எண்வகைச் சித்திகளை கைவரப் பெற்றவர்கள் என்றும் வரையறுப்பர்.

மேற்கண்ட தகவல்களில் எத்தனை சரி?

(A) 4

(B) 3

(C) 2

(D) 1

56. பொருத்துக: அட்டமா சித்திகள்

| | | |
|---|---|---|
| a. மகிமா | - | 1. அணுவைப் போல சிறுத்து நிற்கும் ஆற்றல் |
| b. கரிமா | - | 2. வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல். |
| c. அணிமா | - | 3. காற்றில் மிதக்கும் ஆற்றல் |
| d. லகிமா | - | 4. எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றல் |

(A) 4 2 1 3

(B) 2 4 1 3

(C) 3 4 2 1

(D) 2 3 4 1

57. பின்வருவனவற்றுள் எத்தனை தொடர்கள் சரி?

1. விழுந்த மலர் கிளைக்கு திரும்புகிறது அடடா... வண்ணத்துப்பூச்சி - மோரிடாகே
2. பெட்டிக்கு வந்த பின் எல்லா காய்களும் சமம் தான், சதுரங்கக் காய்கள் - இஸ்ஸா
3. பட்டுப்போன மரக்கிளை அமர்ந்து ஓய்வெடுக்கும் காகம் இலையுதிர் கால மாலை – பாஷோ

(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

58. அப்துல் ரகுமான்,

1. இவர் வானம்பாடி கவிஞர்களில் ஒருவர்.
2. வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றியவர்.
3. ஆலாபனை, வானவீதி, சித்தன் முதலான பல நூல்களை எழுதியுள்ளார்.
4. இவரது ஆலாபனை என்னும் கவிதை தொகுப்பிற்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்துள்ளது.

மேற்கண்ட தகவல்களில் எது/எவை தவறு?

(A) 2 மட்டும்
(B) 3 மட்டும்
(C) 4 மட்டும்
(D) எதுவுமில்லை

59. வில்லிபாரதத்தில்,

1. விசயன் என்பது அர்ஜுனனை குறிக்கும்.
2. அயன் என்பது கிருஷ்ணனை குறிக்கும்.
3. சூரன் என்பது அரக்கனை குறிக்கும்.
4. அவுணன் என்பது பிரம்மனை குறிக்கும்.

மேற்கண்ட வாக்கியங்களில் எது சரி?

(A) 1 மட்டும்
(B) 1, 3
(C) 4 மட்டும்
(D) அனைத்தும்

60. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1. தமிழ் மொழிக் காப்பியங்கள் போரினை முதன்மைப்படுத்தி பேசுவதில்லை.

கூற்று 2: பிறமொழி இதிகாசங்கள் போரினை முதன்மைப்படுத்தி பேசுகின்றன.

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை தவறல்லாதது?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

61. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. வள்ளலார் 7 வயதிலேயே கவி பாடும் வல்லமை பெற்றவர்.
2. இவர் தெய்வமணிமாலை, கந்தர் சரவணமாலை ஆகிய நூல்களை உருவாக்கியவர்.
3. இவர் மனுமுறை கண்ட வாசகம் எனும் உரைநடை நூலை நமக்கு தந்தவர்.
4. சின்மய தீபிகை, தொண்ட மண்டல சதகம் போன்ற நூல்களை பதிப்பித்தவர்.

மேற்கண்ட வாக்கியங்களில் எத்தனை தவறு?

(A) 1
(B) 2
(C) 3
(D) ஏதுமில்லை

62. தாகூர் தொடர்பான பின்வரும் வாக்கியங்களில் எது சரியற்றது?

(A) பதினாறாவது வயதிலேயே கவிதைகள் எழுத தொடங்கியவர்.
(B) இவர் அனைவராலும் குருதேவ் என்று அழைக்கப்படுகிறார்.
(C) 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து ஆங்கில அரசு வழங்கிய சர் பட்டத்தை துறந்தார்.
(D) இவர் 1923இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

63. காலையில் கடிநகர் கடந்து நமது வேலை முடித்து ..

அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் காண்க.

(A) பெரிய நகரம்
(B) காவல் நகரம்
(C) கூட்டம் நிறைந்த நகரம்
(D) வணிக நகரம்

64. சொல்லும் பொருளும்: பொருந்தா இணை எத்தனை?

1. தூளி - வாய்க்கால்
2. அயம் - குதிரை
3. அண்டயோனி - ஞாயிறு
4. சாடு - கல்

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

65. ஆனந்தரங்கர் தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியற்றதை தேர்வு செய்.

1. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
2. பிரெஞ்ச் கிழக்கிந்திய உரைபெயர்ப்பாளராகவும் டூமாஸ் என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.
3. ஆளுநர் துய்ப்ளே காலத்தில் தலைமை துவிபாஷியாகப் பணியாற்றியவர்.
4. இவர் எழுதிய நாட் குறிப்புகள் 14 தொகுதிகளாக தமிழில் வெளிவந்துள்ளன.

(A) 1, 3
(B) 4 மட்டும்
(C) 2, 4
(D) எதுவுமில்லை

66. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : அந்த காலத்தில் ஒன்று தவறாமல் எழுதிய சித்திரகுப்தன் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாட நிகழ்வுகளை எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர் - வ.வே.சு.ஐயர்

கூற்று 2: தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் பாரீசில் மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்படுகின்றன - உ.வே.சா

மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) ஏதுமில்லை

67. 'ஆனந்தரங்கர் பற்றிய சில நூல்கள் ' தொடர்பான பின்வருவனவற்றுள் எது தவறு?

(A) ஆனந்தரங்கன் கோவை - தியாகராய தேசிகர்

(B) வானம் வசப்படும் - பிரபஞ்சன்

(C) ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் - அரிமதி தென்னவன்

(D) ஆனந்தரங்கர் ஏடு - பாரதியார்

68. அடிக்கோடிட்ட சொற்களின் பொருள் அறிக.

"தெண்டிரை ஆரமும் பூணும் சிந்தலால்
விண்டுபற் பலபல மொழிவி எம்பலால் மண்டிய வளந்தலை........"

(A) உலகம், மலை, நிறைந்த

(B) நீரலை, திறந்து, நிறைந்த

(C) தென்கரை, குற்றம், சிறந்த

(D) நெருங்கிய, திறந்து, சிறந்த

69. சீறாப்புராணம்,

1. மூன்று காண்டங்களும் 94 படலங்களும் கொண்டது.
2. நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்தியதால் 'பனு அகமது மரைக்காயர்' இந்நூலை முடித்தார்.
3. இது 5027 அகவற்பாக்களை கொண்டது.
4. இது 'சின்னச்சீறா' என்றும் அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட வாக்கியங்களில் எத்தனை சரி?

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

70. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. அகநானூறு 145 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும்.
2. இது நெடுந்தொகை நானூறு என்று அழைக்கப்படுகிறது.
3. இது களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என்று மூன்று வகையாக பிரிப்பர்.

மேற்கண்ட தகவல்களில் எது /எவை சரியானது?

(A) 1, 2

(B) 2, 3

(C) 1, 3

(D) 1, 2, 3

71. பின்வருவனவற்றுள் எது தவறு? (திணை- பெரும்பொழுதுகள்)
   (A) முல்லை - கார்
   (B) பாலை - கூதிர், முன்பனி, பின்பனி
   (C) நெய்தல் - ஆறு பெரும்பொழுதுகள்
   (D) மருதம் - ஆறு பெரும்பொழுதுகள்

72. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1: ராஜராஜன் 988ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றி கொண்டதை போற்றும் வகையில் பெரிய கோவிலின் உயரமான கோபுரத்திற்கு 'கேரளாந்தகன் வாயில் கோபுரம்' என பெயரிடப்பட்டது.
   கூற்று 2: இரண்டு நுழைவாயில் கோபுரங்கள் கொண்ட கோவிலை அமைப்பது பிற்காலச் சோழர்களின் தனிச்சிறப்பாகும்.
   மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1, 2
   (D) எதுவுமில்லை

73. பின்வரும் கூற்றுகளை கவனித்து பிழையான தொடரை தேர்ந்தெடு.
   (A) பெரிய கோவிலில் உள்ள இரு கோபுரங்களில் முதலில் உள்ளது இராஜராஜன் திருவாயில்.
   (B) கோபுரம் என்பது, வாயில்களின் மேலே அமைக்கப்படுவது.
   (C) விமானமானது அகநாழிகையின் (கருவறை) மேல் அமைக்கப்படுகிறது.
   (D) கற்றளி கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் தஞ்சை பெரிய கோயில் ஆகும்.

74. பின்வரும் எந்த இடங்களில் உள்ள கோவில்களின் கோபுரங்கள் 150 அடிக்கும் மேல் உயரமுள்ளவை.
   1. காஞ்சி
   2. தில்லை
   3. இராமநாதபுரம்
   4. திருவரங்கம்
   (A) 1, 2, 3
   (B) 2, 3, 4
   (C) 1, 2, 4
   (D) அனைத்தும்

75. திருக்குற்றாலக் குறவஞ்சி,
   1. தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பை புகழ்ந்து பாடப்பட்டதாகும்.
   2. இந்நூல் திரிகூட ராசப்பக் கவிராயரின் ‘கவிதைக் கிரீடம்’ என்று போற்றப்பட்டது.
   3. மதுரை முத்துவடுக சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இணங்க பாடி அரங்கேற்றப்பட்டது.

   மேற்கூறியவற்றில் எது/ எவை தவறு?
   (A) எதுவுமில்லை
   (B) 1 மட்டும்
   (C) 2 மட்டும்
   (D) 3 மட்டும்

76. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. திருவாசகம் என்பது, மாணிக்கவாசகரால் சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும்.
   2. சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் ஆறாம் திருமுறையாக உள்ளது.
   3. இதில் 51 திருப்பதிகங்கள் மற்றும் 658 பாடல்கள் அடங்கி உள்ளன.
   4. இந்நூலில் 36 சிவத்தலங்கள் பற்றி பாடப் பெற்றுள்ளன.

   மேலே உள்ள கூற்றுகளில் இருந்து எத்தனை சரி என்பதை தேர்வு செய்.
   (A) 1
   (B) 2
   (C) 3
   (D) 4

77. இளையராஜா பெற்ற விருதுகள் : பொருந்தாத இணை எது?
   (A) 1980 - தமிழக கலைமாமணி விருது
   (B) 1888 - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது
   (C) 2016 - சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது
   (D) 2018 - பத்ம விபூஷண் விருது

78. தவறான தொடர் எது?
   (A) மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடல் ‘நம்ரதா கே சாகர் ‘.
   (B) சிம்பொனி இசையை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும்.
   (C) ஆசியாவிலேயே முதன் முதலில் சிம்போனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர், இளையராஜா ஆவார்.
   (D) மேற்கண்ட எதுவுமில்லை

79. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | விரியன் | - 1. | தண்டை |
| b. | திருகுமுருகு | - 2. | காலாழி |
| c. | நாங்கூழ்ப்புழு | - 3. | சிலம்பு |
| d. | குண்டலப்பூச்சி | - 4. | பாடகம் |

(A) 3 4 2 1
(B) 3 1 4 2
(C) 4 3 2 1
(D) 4 1 3 2

80. சங்கரதாஸ் சுவாமிகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
1. ‘சமரச சன்மார்க்க சபை’ என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார்.
2. 1919 இல் ‘தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை’ என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார்.
3. இவர் ‘தமிழ் நாடகத்தின் தந்தை’ என்று அழைக்கப்படுகிறார்.

மேற்கண்ட தொடர்களில் எது /எவை சரி?
(A) 1 மட்டும்
(B) 1, 3
(C) 1, 2
(D) 1, 2, 3

81. பொருந்தாத இணை எது?
(A) சிவானந்த நடனம் - ஆனந்த குமாரசுவாமி
(B) செம்மீன் - பசுவய்யா
(C) லங்காபுரி ராஜா - பானுச்சந்திரன்
(D) சுட்டுவிரல் - சாகுல் ஹமீது

82. பின்வருவனவற்றுள் சுந்தர ராமசாமியின் படைப்புகளில் பொருந்தாதது எது?
1. காகங்கள்
2. ரத்னாபாயின் இலக்கியம்
3. தோட்டியின் மகன்
4. குழந்தைகள் பெண்கள் ஆண்கள்.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 3
(D) எதுவுமில்லை

83. தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு,

1. Love poems from a Classical Tamil Anthology - ம.லெ.தங்கப்பா
2. Hues and Hormonies from an Ancient Land - ஏ.கே. ராமானுஜம்

மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?

(A) 1,2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

84. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தை தமிழ் வடிவில் தந்தவர்.
2. ‘வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே’ என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடல் புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக உள்ளது.

மேற்கொண்ட கூற்றுகளுக்கு பொருத்தமானவர் யார்?

(A) மகாகவி
(B) புரட்சிக்கவி
(C) திரு.வி.க
(D) ஜீவானந்தம்

85. கீழ்க்கண்ட பாடல் வரிகளுக்கு ஏற்ற நூலை தேர்வு செய்.

1. மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது.....
2. அறன் நெறி பிழையாத் திறன்அறி மன்னர்....

(A) அகநானூறு, புறநானூறு
(B) பதிற்றுப்பத்து, அகநானூறு
(C) பதிற்றுப்பத்து, வில்லிபாரதம்
(D) புறநானூறு, வில்லிபாரதம்

86. பொருள் அறிக.

1. நிரையம் - நரகம்
2. ஏமம் - பாதுகாப்பு
3. யாணர் - புலவர்

மேற்கண்டவற்றுள் எது தவறு?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) ஏதுமில்லை

87. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பதிற்றுப்பத்தில், இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் உதயன் நெடுஞ்சேரலாதன்.
2. இதனை பாடியவர் குமட்டூர் கண்ணனார்.
3. இதனை பாடியமைக்காக, உம்பர்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயில் பாதியையும் பரிசாகப் பெற்றார்.

மேற்கண்ட தகவல்களில் எத்தனை சரி?

(A) 1

(B) 2

(C) 3

(D) ஏதுமில்லை

88. கவிதைகளுக்கேற்ற கவிஞர்கள் சரியாகப் பொருந்தி உள்ளது எது?

(A) எத்தனை உயரம் இமயமலை அதில் இன்னொரு சிகரம் உனது தலை - தாரா பாரதி

(B) எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா - பாரதிதாசன்

(C) விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை ... – பாரதி

(D) யாதும் ஊரெனச் சாற்றியதும் மக்கள் யாவரும் கேளிர் - புரட்சிக்கவி

89. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் - இளங்கோவடிகள்

கூற்று 2 : தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க... - கம்பர்

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை தவறு?

(A) 1, 2

(B) 1 மட்டும்

(C) 2 மட்டும்

(D) ஏதுமில்லை

90. பின்வரும் வரிகளுக்குரிய ஆசிரியர் யார்?

"சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியை காட்டிலும்

சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ"

(A) திரு.வி.க

(B) பாரதியார்

(C) ஜீவானந்தம்

(D) நாமக்கல் கவிஞர்

91. "பத்தாவது தடவையாக
விழுந்தவனுக்கு
முத்தமிட்டு சொன்னது பூமி ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ"
- கவிஞர் யார்?
(A) தமிழன்பன்
(B) கழனியூரன்
(C) கண்ணதாசன்
(D) பெ. தூரன்

92. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 : ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறியவர் திருமூலர்
கூற்று 2 : ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு என்று கூறியவர் பட்டினத்தார்.
மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

93. பின்வரும் கூற்றுகளில் சரியற்றது எது?
(A) 'ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை' - திருமந்திரம்.
(B) "சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?' - பாரதியார்.
(C) 'சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்' - பாம்பாட்டி சித்தர்.
(D) 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' - திருமூலர்.

94. வில்லிபாரதம்,
1. இது பத்து பருவங்களைக் கொண்டது.
2. 4351 விருத்தப் பாடல்களால் ஆனது.
3. இதனுடைய முதல் பருவம் ஆதி பருவம் ஆகும்.
மேலே உள்ள தகவல்களில் எத்தனை சரி?
(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

95. வில்லிபாரதத்தில்,

1. நான்கு வேதத்தவன் என்று அழைக்கப்படுபவன் கண்ணன்.
2. சூரியனின் தோன்றல் என்று அழைக்கப்படுபவர் கன்னன்.
3. அரயன் என்பவன், அரக்கன் மாவலி சக்கரவர்த்தி ஆவான்.

மேற்கண்டவற்றில் எவை சரி?

(A) 1, 2
(B) 2, 3
(C) 2 மட்டும்
(D) அனைத்தும்

96. வள்ளலாரின் தவறானது எது?

(A) அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை தோற்றுவித்தார்.
(B) பசிப்பிணியை போக்க சத்திய தருமசாலையை தொடங்கினார்.
(C) இவர் தொண்ட மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
(D) கடவுள் ஒருவரே. உருவ வழிபாடு எதிர்த்தவர்.

97. எத்தனை இணைகள் பொருந்தி உள்ளது?

1. உணவுகளின் பிண்டந்தான் உடலென்ப தறிந்தேன் - பெ.தூரன்
2. மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன் - இன்குலாப்
3. நான் என்பாய் அது நீயில்லை, வெறும் நாடக வசனம் பேசுகிறாய் - அப்துல் ரகுமான்
4. சீரிய நெற்றி எங்கே? சிவந்தநல் இதழ்கள் எங்கே? - கண்ணதாசன்.

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

98. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

1. தாகூர், 1913 ஆம் ஆண்டு கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு நோபல் பரிசு பெற்றார்.
2. இவர் 2000க்கும் மேற்பட்ட இசை பாடல்கள் எழுதியுள்ளார்.
3. இவரது ‘அமர் சோனார் பங்களா’ என்னும் பாடல் வங்கதேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் திகழ்கிறது.

மேற்கூறியவற்றில் எது/ எவை தவறு?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

99. பின்வருவனவற்றுள் எது நாடக இலக்கண நூல்கள் அல்ல?
   (A) சந்தம்
   (B) பயிற்றியம்
   (C) சயந்தம்
   (D) முறுவல்

100. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்.
   1. மனோன்மணியம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்.
   2. இது லிட்டன் பிரபு, 1856 இல் எழுதிய இரகசிய வழி என்ற நூலை தழுவி எழுதப்பட்டது.
   3. இதனை சுந்தரனார் 1891 இல் தமிழில் எழுதியுள்ளார்.
   4. இது எளிய நடையில் வெண்பாவால் அமையப்பெற்றது.
   (A) 1, 3, 4
   (B) 2, 3
   (C) 1, 3
   (D) 1, 2, 4

******

மனித நேயம் வளர்ப்போம் மானுடம் மீட்போம்
சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை